# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 5/2018**

பெயர் : **கந்தாயி** நாள் : 08.06.2023

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 – கந்தாயி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.44</u>

வழக்கு சொத்திற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் சுமார் 1/2 மைல் தூரம் இருக்கும். வழக்கு சொத்தில் சின்ராஜ் வீடு கட்டி தறி தொழில் செய்து வருகிறார் என்றால், தவறு. வழக்கு சொத்தில் சின்ராஜ் வீடு கட்டி தறி தொழில் செய்து வருகிறார் என்றாலும், நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும். சரியல்ல.அசல் வழக்கு எண் 316/2008, 389/2006, 161/2004 வழக்குகளில் சின்ராஜ் ஒரு தரப்பினரா என்றால், இல்லை. அசல் வழக்கு எண் 161/2004 வழக்கானது சின்ராஜ் தாயார் ஒரு பெரியண்ணன்மீது போட்ட வழக்கு என்றால், சரியல்ல. என்மீதுதான் வழக்கு போட்டார். அசல் வழக்கு எண் 161/2004 வழக்கானது சின்ராஜ் தாயார் ஒரு பெரியண்ணன்மீது போட்ட வழக்கு என்றாலும், அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி 3 வழக்குகளில் வாதி சின்ராஜ் ஒரு தரப்பினர் இல்லையென்பதால், அந்த வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் அவரை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

2) கூட்டு பட்டாதாரர்கள் வாதிக்கு இடைஞ்சல் செய்யவில்லை என்பதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேன். அடங்கல் கணக்கை தாக்கல் செய்யவில்லையென்றாலும், பொய்யாக தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் எனது பெயரில் உள்ள தனிப்பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தனிப்பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பொய்யாக ஆவணங்களை தயார் செய்து எனது பெயரில் கூட்டுப் பட்டா வாங்கிக்கொண்டேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தில் ஒருபோதும் இருந்ததில்லை என்று சொன்னால், சரியல்ல.

3) அசல் வழக்கு எண் 3/2017 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அவருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்திற்கு தனிப்பட்டா கேட்டு மனு தாக்கல் செய்தபோது அதற்கு நான் பொய்யான சங்கதிகளை கூறி ஆட்சேபனை செய்ததால் மனு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனார் 19976 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பெருமாள் என்பவர் கோனேரிக்கு எழுதிய உயிலை மோசடியானது என்று கூறும் நிலையில், உயிலின் நகலை எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பாக ஒப்படைக்க வேண்டி வாதிக்கு மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால், அவரிடம் கேட்டுள்ளோம். வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டுதான் உயில் நகலை கேட்டோம் என்றாலும், அதற்கு முன்பாக கேட்கவில்லையென்றாலும், சரியல்ல. விசாரணைக்கு முன்பாக உயிலின் நகலை பார்வையிடாமலேயே அது போலியானது என்று எதிர் வழக்குரையில் கூறியுள்ளோம் என்று சொன்னால், சரியல்ல.

4) உயில் ஆவணம் மோசடியானது என்று வழக்காடும் நிலையில், அந்த ஆவணத்தை கை ரேகை நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. அனுப்பியுள்ளோம். நான் அவ்வாறு அனுப்பவில்லையென்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்திற்கான மதிப்பு சுமார் 25 லட்சம் என்பதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அசல் வழக்கு எண் 3/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி ஏதேனும் நடவடிக்கை எடுத்து உள்ளேனா என்றால், எடுத்துள்ளேன்.

5) வாதி வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இல்லையென்று வழக்குரையில் கூறியுள்ளது தவறானது என்று சொன்னால், சரியல்ல. நானும் மற்ற பிரதிவாதிகளும் வாதிக்கு 15.12.2017 ல் தொந்தரவு கொடுத்தோம் என்றாலும், அதனால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சரியல்ல. நிரூபண பிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல் கூறியுள்ள விபரங்கள் பொய்யானது என்று சொன்னால், சரியல்ல. பெருமாள் இறக்கும் வரை மற்ற சகோதரிகளுடன் சுமூகமான உறவில் இருந்து வந்ததாக

பொய்யாக சாட்சியம் கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. அசல் வழக்கு 3/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்னை கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல. நிரூபண பிரமாண வாக்குமூலம் 9 முதல் 38 வரை கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால், சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.05

ஒப்பம்/ கந்தாயி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககரி.